# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No.216/2014 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.5 |
| Name | :பாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2023

-----

(எதிரிகள் 1,3,4,5,6 ஆஜர். இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் நடுமுதலைக்குளத்தில் இருக்கிறேன். நான் ஓட்டுநராக இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். புகார்தாரர் சித்தனை தெரியும். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 03.06.2013ம் அன்று இரவு 8.00 மணிக்கு நானும், பாண்டி என்பவரும் வேலைக்கு சென்றுவிட்டு வடக்கிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது விக்கிரமங்கலம் போலிசார் வந்து தலையாரி இளங்கோவன் வீட்டு பக்கத்தில் வந்து அக்கம்பக்கத்து வீட்டாரை என்னிடம் விசாரித்தார்கள். அது சம்மந்தமான எழுதினார்கள்.

என்னுடன் வந்தவர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். காட்டப்படும் பார்வை மகஜர் நானும், பாண்டியும் கையெழுத்து செய்தது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2.** காட்டடப்ப்டும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது எப்போது போட்டேன் என்றும் எதற்காக போட்டேன் என்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் குறிப்பிட்ட பகுதி மட்டும் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையின் போது அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நேரம் இவ்வழக்கு சான்று பொருளான கத்தி மற்றும் இரும்பு கம்பி ஒன்று ஆகியவை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றும் போது நானும் என்னுடன் வந்த பாண்டி என்பவரிடம் தயார் செய்த அத்தாட்சியில் சாட்சியாக கையெழுத்து செய்துவிட்ட தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக அத்தாட்சி குறித்து எதுவும் தெரியாது என பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் கையெழுத்து செய்த போலிசார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து கைெயெழுத்து செய்யவில்லை

என்றாலும், வெற்று பேப்பரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

/*Sd/* Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 6.7.2023,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.